# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109759

1. District : மாவட்டம் திருச்சி  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 12  Date: நாள் 17.10.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act-1988 (as amended  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in 2018)  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 12.10.22  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 1045 Hrs.  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.22  Time : நேரம் 0800 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   எழுத்து மூலம் (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ, வட மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோவில் அலுவலகம், குணசீலம், முசிறி (T.k), திருச்சி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.R. பிச்சுமணி ஐயங்கார்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரெங்கநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12-02-67  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் அர்ச்சகர்  (g) Address : முகவரி நெ. 3/25, மேலத்தெரு, குணசீலம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. ஜோதீஸ்வரி, தொல்லியல் வல்லுனர், State Level Expert Committee உறுப்பினர், சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   அறியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS......................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

K.R. Pichumangesan
17/10/22

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
17/10/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. பாலமுருகன்
Rank: நிலை காவல் ஆய்வாளர், ..................... No. எண் ..........
திருச்சி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

<u>திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2022-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 17.10.2022 பணியில் இருந்த போது காலை 08.00 மணியளவில் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், குணசீலம், மேலத்தெரு, நெம்பர்.3/25, என்ற முகவரியில் வசித்து வரும் ரெங்கநாதன் மகன் K.R.பிச்சுமணி ஐயங்கார், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், குணசீலம், தொல்லியல் வல்லுனர் திருமதி.மூர்த்தீஸ்வரி மற்றும் புகார்தாரர் K.R.பிச்சுமணி ஐயங்கார், ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 17.10.2022 காலை 10.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.12/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K.R.பிச்சுமணி ஐயங்கார், வயது.55/2022, த/பெ.ரெங்கநாதன், நெ.3/25, மேலத்தெரு, குணசீலம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. ஐயா, நான் முசிறி வட்டம், குணசீலம் மேலத்தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். குணசீலம் ஸ்ரீபிரசன்ன வேங்கடாஜலபதி பெருமாள் திருக்கோவிலில் 1994 முதல் பரம்பரை நிர்வாக டிரஸ்டியாக இருந்து வருகிறேன். மேற்படி கோவிலானது பரம்பரை டிரஸ்டிகள் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்த கோவிலின் மூலஸ்தான மண்டபம், மஹா மண்டபம் ஆகியவற்றிற்கு திருப்பணி செய்து மஹா சம்ப்ரோக்ஷணம் 2004 ஆம் ஆண்டு நடைபெற்றது. தற்போது 12 ஆண்டுகளுக்கு மேலானதால் உபயதாரர்கள் மூலமாக திருப்பணி செய்ய உரிய ஆவணங்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு கொடுக்கப்பட்டு உரிய உத்தரவுகளின்படி பாலாலயம் 20.06.2019 அன்று நடைபெற்றது. தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் கூடுதல் ஆணையர் திருப்பணிகள் பிரிவு, சென்னை, அவர்களால் 14.12.2021-ல் நடத்தப்பட்ட State Level Expert Committee கூட்டத்தில் கமிட்டியின் உறுப்பினர்கள் நேரடியாக கோவிலை ஆய்வு செய்து திருப்பணிகள் நடைபெற ஆய்வறிக்கை வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி கோவிலை திரு.Dr.தட்சிணாமூர்த்தி, ஸ்தபதியார் 26.02.2022 அன்றும், திரு.கோவிந்தராஜபட்டர் வைஷ்ணவம் 18.03.2022 அன்றும், திருமதி.மூர்த்தீஸ்வரி, தொல்லியல் வல்லுனர் 17.08.2022 அன்றும் ஆய்வு செய்தனர். ஆனால் தற்போது வரை ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெறாததால் ஆலயத்திருப்பணிகள் நடைபெற்மல் நிலுவையில் இருந்து வருகிறது. நான், திருமதி.மூர்த்தீஸ்வரி அவர்களிடம் செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் எனது கைபேசியில் இருந்து தொடர்பு கொண்டு திருப்பணிகள் ஆய்வறிக்கையினை விரைவில் முடித்து தருமாறு கேட்டேன். அப்போது திருமதி.மூர்த்திஸ்வரி அவர்கள் திருப்பணிகள் தொடர்பான ஆய்வறிக்கையினை அவர்களது குழுவினருடன் கலந்து ஆலோசித்து ஒப்புதல் பெற்று தருகிறேன் என்று கூறினார்.

மீண்டும் 9.10.2022 அன்று இது தொடர்பாக நான் அவரிடம் அவாது கைபேசிக்கு பேசியபோது 12.10.2022 அன்று கோவிலுக்கு வரும்போது இது சம்மந்தமாக பேசுவதாக என்னிடம் கூறினார். அதன்படி, கடந்த 12.10.2022 அன்று காலை State Level Expert Committee உறுப்பினர்களில் ஒருவரான தொல்லியல் வல்லுனர் திருமதி.மூர்த்தீஸ்வரி குணசீலம் கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு காலை 10.45 மணியளவில் திருக்கோவில் அலுவலகத்திற்கு வந்தபோது நான் அவரிடம், மேற்படி கோவிலின் திருப்பணிகள் நீண்ட காலமாக மேற்கொள்ள முடியாமல் இருந்து வருகிறது, நீங்கள் குழுவில் மெம்பராக இருப்பதால் ஆய்வறிக்கை விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டேன். அதற்கு திருமதி.மூர்த்திஸ்வரி அவர்கள் என்னிடம் ஆய்வறிக்கையில் குழு உறுப்பினர்கள் அனைவரிடமும் ஒப்புதல் பெறவேண்டும் என்றும், குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்தால்தான் ஒப்புதல் வழங்குவார்கள் என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம் என்னம்மா ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, எங்கள் குழுவிற்கு 10 இலட்சம் ரூபாய் கொடுத்துவிடுங்கள் அப்போதுதான் ஆய்வறிக்கை முடித்து தரமுடியும் என்று கூறினார். அதற்கு நான், கோவில் திருப்பணியினை உபயதாரர்கள் மூலம் செய்ய உள்ளதால், நீங்கள் கேட்ட பணத்தினை அவர்களிடம் கேட்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம் உங்கள் கோவிலில் 10 பேர் டிரஸ்டிகளாக இருக்காங்க அவங்ககிட்ட சொல்லி வாங்கி கொடுங்க என்று கூறினார். அதற்கு நான், அவர்கள் இவ்வளவு பணம் தரமாட்டார்கள் நான்தான் ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் சரிசரி 5 இலட்சம் கம்மிபண்ணிக்கிட்டு 5 இலட்சம் ரூபாயாவது ஏற்பாடு செய்து கொடுங்கள், இதுக்கு மேல கம்மிபண்ண முடியாது என்று கண்டிப்பாக கூறினார். நான் அவரிடம் அவ்வளவு பணம் உடனே ஏற்பாடு செய்ய முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் ஒரு இலட்சம் ரூபாய் அட்வான்ஸா கொடுத்திடுங்க, மீதி பணத்தை ஆய்வறிக்கை கொடுத்தபிறகு கொடுங்க என்று சொன்னார். மேலும், நான் திருச்சிக்கு திங்கள் கிழமை (17.10.2022) வருவேன் அன்று உங்களிடம் ஒரு இலட்சம் அட்வான்ஸ் பணத்தை வாங்கி கொள்கிறேன் என்றும் கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை, இருந்தாலும் அவரிடம் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட State Level Expert Committee உறுப்பினர்களின் ஒருவரான தொல்லியல் வல்லுனர் திருமதி.மூர்த்தீஸ்வரி என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (K.R.Pichumani Iyangar) 17/10/22 Submitted to the Court of the Hon'ble Special Judge, Special court for Prevention of Corruption Act cases, Trichy. Received this report on 17.10.22 at 08.00 hrs, made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.12/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 10.00 hrs on 17.10.22. Sd.xxx (K.Balamurugan) 17.10.22 Inspector of Police, V&AC, Trichy.

17/10/22

கு.பாலமுருகன்.
Inspector of Police,
V&AC, Trichy.